# உயர்த்தப்பட்ட புலம்பல்கள்

# Laments Lifted High



22 Prayers for Triumph in Trials

சோதனைகளில் வெற்றிக்கான 22 ஜெபங்கள்

These prayers were born in the long night of the soul— in seasons of hidden tears and unspoken grief, when rejection wore many faces: overqualified yet unwanted, unqualified yet burdened with vision, passed over, misunderstood, cast aside.

They rose from the crucible of countless small deaths— micro-wounds of daily despair, macro-shadows of loss and isolation, emotional tempests, spiritual wilderness, physical darkness that words fail to name.

Yet in the deepest valley, a whisper remained: "Thank You, Father."

These letters to Heaven were penned not in triumph, but in trembling trust— raw, unpolished, honest before the Throne.

And now, by the mercy of the Father, in the Name of the Lord Jesus Christ, and through the fire of the Holy Spirit, these private cries are released as public light— that any fellow traveler in the shadows might find companionship on the road, and glimpse the dawn that always follows the darkest hour.

May every reader who opens these pages hear the same gentle voice that carried the writer: "You are not alone. I have heard every prayer. The morning comes."

To the glory of the One God— Father, Son, and Holy Spirit— whose perfect Oneness turned my midnight into song.

**Amen.**

இந்த ஜெபங்கள் ஆத்துமாவின் நீண்ட இரவில் பிறந்தன— மறைந்த கண்ணீர்களும் பேசப்படாத துயரங்களும் நிறைந்த காலங்களில், நிராகரிப்பு பல முகங்களை அணிந்திருந்தபோது: அதிக தகுதியுடையவனாக இருந்தும் விரும்பப்படாதவன், குறைந்த தகுதியுடையவனாக இருந்தும் பார்வையால் சுமக்கப்பட்டவன், புறக்கணிக்கப்பட்டவன், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவன், ஒதுக்கிவைக்கப்பட்டவன்.

அவை எண்ணற்ற சிறு மரணங்களின் உலையிலிருந்து எழுந்தன— தினசரி துயரத்தின் சிறு காயங்கள், இழப்பு மற்றும் தனிமையின் பெரிய நிழல்கள், உணர்ச்சிக் காற்றழுத்தங்கள், ஆவிக்குரிய பாலைவனங்கள், சொற்களால் விளக்க முடியாத உடல் இருள்.

ஆனால் ஆழ்ந்த பள்ளத்தாக்கிலும், ஒரு முணுமுணுப்பு இருந்தது: "நன்றி, பிதா."

இந்த சொர்க்கத்திற்கான கடிதங்கள் வெற்றியில் எழுதப்படவில்லை, ஆனால் நடுங்கும் நம்பிக்கையில்— மூலமானவை, பளபளப்பற்றவை, சிங்காசனத்திற்கு முன் நேர்மையானவை.

இப்போது, பிதாவின் இரக்கத்தால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் தீயால், இந்த தனிப்பட்ட அழுகைகள் பொது ஒளியாக வெளியிடப்படுகின்றன— நிழல்களில் பயணிக்கும் எந்த சக பயணியும் பாதையில் தோழமையைக் காணட்டும், மிக இருண்ட மணிநேரத்திற்குப் பின்னர் எப்போதும் வரும் விடியலைப் பார்க்கட்டும்.

இந்த பக்கங்களைத் திறக்கும் ஒவ்வொரு வாசகனும் எழுத்தாளரைத் தாங்கிய அதே மென்மையான குரலைச் செவிமடுக்கட்டும்: "நீ தனியாக இல்லை. நான் ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்டேன். காலை வருகிறது."

ஒரே கடவுளின் மகிமைக்காக— பிதா, மகன், பரிசுத்த ஆவி— அவருடைய சரியான ஒருமை என் நள்ளிரவை பாடலாக மாற்றியது.

**ஆமென்.**

09 Nov 2008

இயேசுவே, வானமும் பூமியும் உம்மை துதிப்பதாக.
சேனைகளெல்லாம் யாவும், நானும் கூட சேர்ந்து உம்மை துதிப்போமாக.
காற்றும், கடலும் உம் கிரியைகளை எண்ணி சத்தமாய் துதிப்பதாக.
சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் உம் வல்லமையை நினைத்து துதிப்பதாக.
கடலும் அதிலுள்ள யாவும் உம் மகத்துவத்தை நினைத்து துதிப்பதாக.
மலைகளும், குன்றுகளும், சிகரங்களும் உம் உயர்வை எண்ணி துதிப்பதாக.
மரம், செடி, கொடிகள் யாவும் உம் கனிகளையும் இனிமையும் சொல்லி துதிப்பதாக.
பறவைகள், பிராணிகள் யாவும் தம் சத்தத்தால் கர்த்தரை துதிப்பதாக.
உம்முடைய பெரிய மகிமையை எண்ணி யாவும் உம்மை துதிப்பதாக.
ஆனால் உம் மாளிகையில் எந்நாளும் நான் இருக்க வேண்டுகிறேன்.
மந்திரியாகவோ, அதிபதியாகவோ கூட அல்ல, உம் அருகே
நின்று உம் பாதத்தை என்றென்றும் முத்தம் செய்யவே!
அப்பா, நான் கண்டுகொண்டேன், பிடித்துவிட்டேன் விடமாட்டேன்
எந்நாளும் விட்டு விலகி போகமாட்டேன். அதற்கு நீரே உதவி செய்ய வேண்டும்
இறைவா, ஒரு விசுவாசம் விலைமதிக்க முடியாத உம்முடைய
கிருபையை எங்களுக்கு அளிக்க வல்லதாய் இருக்கிறது.
இயேசுவே, இன்னும் ஒரு படி மேலே போய், விசுவாசத்தின்
உச்சபடியை கடந்து போகச் செய்திடும். இறைவா கடாட்சம் செய்திடும்.
உம் திரு நாமத்தை வாழ்த்தியே என் வேலையை நான் விட்டு விடுகிறேன்.
ஆண்டவரே, அழகானவரே, அதிசயமானவரே அன்பே உருவானவரே
உம்மையன்றி எனக்கு ஆசை வேறுயில்லை. ஆசைப்பட ஒன்றுமில்லை.
காசும், வீடும், யாவும் வசதியும் பலப்பல கிடைத்திட்டாலும்
உம்மைப்போல ஒரு மகிமையான பொருள் ஒன்றுமில்லையே!
இயேசுவே நீரே என் சுதந்தரமானவராக வேண்டும்.
நீர் மாத்திரம் எனக்குப் போதும். நீர் ஒருவரே எனக்கு வேண்டும்.
இயேசுவே, உம் நாமத்தில் தான் எத்தனையோ மகிமை.
உம் நாமத்திற்கு மட்டுமே எப்படியோ அதிகாரம். வல்லமை.
உம் நாமத்திற்கு மாத்திரமே யாவும் அடங்கி பணிகின்றதே.
இறைவா, நீதியின் வலக்கரத்தினாலே தாங்கி என்னை நடத்தும்.
இன்னும் என்னை பரிசுத்தமாக்கிடும். பாவங்களை கழுவி விடும்.
இந்த பாவ மாம்சத்தை உம் இரத்தத்தால் சுத்தமாக்கிடும்.
இந்தப் பிண்டம் என்னிலிருந்து சீக்கிரமாய் நீங்கிப் போகட்டுமே.
உம்மோடே சீக்கிரமாய் நான் வந்து சேர கிருபை செய்யும்.
தெய்வமே, உம்மாலே நான் மேன்மைகளுக்குள் சேர்ந்திட வேண்டும்.
ஆண்டவரே உம்பாதம் அமர்ந்து நான் நித்தம் துதித்திட வேண்டும்.
மகிமையான பரலோகம் என்றும் மகிமையடைய வேண்டும்.
உம்முடைய மேன்மையான கிருபை இப்புவிக்கு இன்னும் வேண்டும்.

10 Nov 2008

அன்பரே, என் நினைவுகளில் என்னை ஆட்சி செய்பவரும்
இவ்வுலக இரட்சகராம் மீட்பர் இயேசுவாகிய கிறிஸ்துவும்
சுத்தத்தில் மேலான பரிசுத்தமான ஆவியாகிய சத்திய ஆவியும்
என்றாலும் நித்தியஸ்தராய் நிகழ்கின்ற காலத்தில் நியாயாதிபதியாயும்
உன்னதமான ஸ்தலத்திலே அக்கினியாய் வீற்றிருப்பவரும்
மெய்யாகவே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரும்
பாவிகளை பரிசுத்தம் செய்து நீதிமானாய் மாற்றுகின்றவரும்
இப்புவிதனிலே, ஆவியால் எங்களை அபிஷேகம் செய்தவரும்
எங்களுக்காய் எல்லாம் செய்து முடித்த மகிமையாய் ஜொலிக்கிறவரும்
தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு நித்தம் உதவி செய்கிறவரும்
ஜீவனைக் கொண்டிருக்கும் மெய்யான ஜீவனின் அதிபதியும்
ஜீவனுள்ள வசனங்களை எங்களுக்கு கொடுத்துச் சென்றவரும்
பரலோகம் என்னும் மாபெரும் ராஜ்யத்திலே எங்களை கொண்டு சேர்ப்பவரும்
நிலையில்லாத இவ்வுலகில் நிரந்தரமானவரும்
அன்பு இல்லாத இவ்வுலகில் அன்பே உருவானவரும்
எங்களை தம் தோளில் சுமந்து செல்கிறவருமானவரும்
வல்லவரும், நல்லவரும், பரிசுத்தரும், மகா பெரியவரும்
என்னை உருவாக்கினவரும், தம் கையால் வனைந்தவரும்
நான் செல்லுமிடமெல்லாம் என்னோடு கூட வருகின்றவரும்
என் தலையை எண்ணெயால் அபிஷேகம் செய்கின்றவரும்
எல்லா இக்கட்டுகளிலிருந்து என்னை காக்கின்றவரும்
கண்ணின் மணிபோல் என்னை வைத்து காப்பாற்றுகின்றவரும்
எல்லா நிலையிலும் எல்லா காரியங்களையும் செய்கிறவரும்
புதிய புதிய கிருபைகளால் எங்களை அலங்கரிப்பவரும்
என் கண்கள் மெய்யாய் காணுகின்றதை சிருஷ்டித்தவரும்
அந்தகாரத்தில் இருக்கின்ற யாவருக்கும் வெளிச்சமாயிருக்கிறவரும்
இராஜாக்களை தள்ளி இராஜாக்களை ஏற்படுத்துகின்றவரும்
இமை வார்த்தையினால் தமது ஊழியக்காரர்களை மேன்மை படுத்துகிறவரும்
பிதாவின் சித்தம், குமாரனின் கடமை, துணையாளரின் வழிகாட்டல்
யாவையும் வடிவமைத்து தன்னில் கொண்டவரும்
இன்று போலுக்கு இருக்கின்ற எல்லாமும்
புறஜாதிகளுக்கு இரட்சகரும், மீட்பவரும், பாவ நிவாரண பலியாயும்
தன் மகிமையை துறந்து நிந்திக்கப்பட்டவரும், தள்ளப்பட்டவரும்
மனுஷர்களின் பாவம் அவர்கள் அறியாமல் செய்வதே என்றவரும்
கலகத்தையும் தன்னுடையதாக்கிக் கொண்டவரும்,
போதகரும், ஆசாரியரும், இராஜாவும், தெய்வமுமாயிருக்கிறவரும்
இயேசுவாம் என் நண்பர், என் அன்பர், என் இன்பர். ஆமென்.

11 Nov 2008

அன்பே உருவானவர் என் இயேசு உயிரோடிருக்கின்றார்.
அவரிடமே நான் பாவத்திற்கு மரித்து விட்டேன். அவருக்குள்ளே பரிசுத்தத்திற்காக
அநாதி சிநேகத்தினால் அவரோடென்றும் பிழைத்தும் இருக்கின்றேன்.
அப்பா, சோதனை நேரத்தில் எனக்கு பெலன் தந்தீரே!
வேதனையின் பொழுதினிலே எனக்கு சிறப்பான உறக்கத்தை தந்தீரே!
இறைவா, நீரே என்னுடைய எல்லா காரியங்களையும் கவனித்து வருகிறீரே!
என் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் என்னை உயர்த்தினீரே
எனக்கு மெய்யான போதனைகளை தந்து ஞானத்தில் வளர்த்தினீரே
என் உள்ளத்திற்கு வெளிச்சமாக நீர் இருந்து பெலப்படுத்துகின்றீரே
என் மாம்சத்திற்குள்ளாக என் பாவங்களை மூடி மறைத்தீரே
இறைவா, நோக்கமில்லாமல் இருந்த என்னை நீர் நோக்கிப் பார்த்தீரே,
நிர்க்கோலமில்லாத என்னையும் இஷ்டப்பட்ட ஆளாய் உருவாக்கினீரே
தெய்வமே, ஒப்பற்ற உம்முடைய திரு நாமம் வாழ்க.
இறைவா, என்னுடைய மதியீனத்தையெல்லாம் அகற்றிவிடும்.
என் துன்மார்க்கத்தனத்தை என்னைவிட்டு எடுத்துப்போடும்
என் தெளிவின்மை என்னைவிட்டு அகன்று போகட்டும்
முட்டாள்தனமான காரியங்களை நான் செய்ய தடை போடும்
ஆண்டவரே, என் அறிவற்ற, புத்தியற்ற தன்மையை நீக்கிவிடும்,
திறமையான காரியங்களை செய்ய என்னை பணித்திடும்.
அறிவுடனும், புத்தியுடனும் என் காரியங்களை நான் நடத்த உதவிசெய்யும்
ஞானவானாய் நடந்து எல்லாருக்கும் தயவுள்ளவனாய் மாறவும்
பிறரை மன்னிக்கும் மனப்பான்மையை எனக்கு பெருக்கிடும்
இறைவா, பணத்தை காட்டிலும் உம்மீது எனக்கு அதிக விருப்பமுண்டு,
ஆகவே, இறைவா நீரே எனக்கு அடைக்கலமானவராய் இருக்கிறீர்
இராஜாதி இராஜா, தேவாதி தேவா உம்மை வாழ்த்துகின்றேன்.
என் துன்ப நேரத்தில் என்னை அணைத்த தேவன் நீர் தானே.
என் இன்ப நேரத்தில் என்னை இன்பப்படுத்தினவரும் நீர் தானே
மெய்யான தெய்வமே, மகிமையின் உருவானவரே
பரிசுத்த ஆவியானவரே, பரலோக இராஜாவே!
உம்முடைய இரகசியங்களை எனக்கு இன்றும் வெளிப்படுத்தும்
என் எழுத்துகளுக்கு ஜீவன் தந்து அதை பயன்படுத்தும்
அற்புத இயேசு இராஜாவே, அகிலத்தை படைத்தவரே
அரசாளும் தெய்வமே, அன்பே பிதாவே, அதிசய தேவனே
மெய்ப்பொருளை காணத் துடிக்கின்றதே என் நெஞ்சம்.
உலகத்தின் மாயைதனை நான் வெறுக்கின்றேன்.
எல்லாமும் நானும் ஒரு மாயை தானே ஐயா.
நீரே மெய். பொய்யல்லாதவர். என்றென்றும் நிலைப்பவர். ஆமென்.

12-11-2008

எல்லாவிடமும் மங்களங்கொண்ட பெருமையோடு சகலத்தை நிறைத்துக்கொண்டிருக்கிற
எங்கள் அழகான பரிசுத்த ஆவியானவரே உமக்கு காலை நேர வணக்கம்.
தெளிவுடையதும் சுவையை அதிகமாக கொண்டிருக்கிற ஜீவ நதியே,
கனியின் சாறிலுள்ள இனிமையையும் பெரும் ரசத்தை கொண்டுள்ள உயர்ந்தவரே
உமக்கு காலை நேர வந்தனம், ஸ்தோத்திரம், ஆராதனை துதிகள்.
ஆண்டவரே, பூமியின் இன்பத்தைக் காட்டிலும் உமது இன்பம் மேலானதே.
மொட்டுகளின் இன்பத்தைக் காட்டிலும் கிறிஸ்துவின் இன்பம் பெரியதானதல்லவோ?
இறைவா, தேவர்கள் யாவற்றைக்காட்டிலும் பெரியதான அரசனல்லவோ?
நீர் தரும் மன்னிப்பு, யாருக்கும் கிடைக்கப்படாத பொருளானதோ?
இறைவா, இவ்வுலகினை மன்னித்தருளும். இரட்சித்துக்கொள்ளும்.
யாவரும் உம்மைவிட்டு வழிவிலகினதற்கு காரணம் நாங்கள் அல்லவோ!
தங்களுடைய பெற்றோரும், போதகர்களுமாமே!
இறைவா, உம்முடைய அன்பை இவ்வுலகத்திற்கு உணர்த்தும்.
உம்முடைய நன்மையான வசனங்கள் யாவருக்கும் சென்றடையட்டும்
தேசத்தின் வறுமை நிலை அழிந்து, செழித்து வளர்ந்தோங்கட்டும்
தேசத்தின் அதிகாரிகள், மந்திரிகள், தலைவர்கள், யாவரும்
உமது நாமத்தை தொழுது கொள்ளட்டும். அது வேண்டுமே!
இதை நினைக்கும் பொழுதே என்னில் இதயம் துள்ளுகிறதே!
இறைவா, இவ்வுலகின் ராஜாக்கள் உமக்கு முன்னே
முழங்கால் படியிட்டு உம் இராஜ்ஜியத்தை தேடட்டுமே!
இவ்வுலகின் ஐசுவரியவான்கள் தங்கள் செல்வத்தை விட்டு
ஐசுவரிய சம்பன்னராம் என் பரமரான உம்மை நாடட்டுமே!
இவ்வுலகின் பாவங்களை விட்டு விலகி பரிசுத்த வாழ்வாம்
பரலோக வாழ்வை நாடி உம்மிடம் ஓடி வரட்டுமே!
அப்பா பிதாவே, அக்கினியால் இவ்வுலகை பரிசுத்தம் செய்யட்டுமே!
உண்மையாய் இருக்கும் பிணிப்பட்டோர் யாவரும் சொஸ்தமாகட்டுமே!
பசாசு பிடித்த மனிதர்கள் அதனின்று விடுதலை பெறட்டுமே!
ஆண்டவரே, அதிசயரே, அழகானவரே, அன்பாயிருப்பவரே!
அள்ள அள்ள குறையாத அன்பின் ஜீவ நீரை உடையவரே!
அதனால் என்னை முழுவதுமாய் நிரப்பிட வேண்டுமே!
இயேசு நாதா! இல்லை என்று சொல்லாதவரே!
இலவசமாய் கிருபையை வெகுமதியாக அளித்தவரே!
சிற்றின்பம் வேண்டாம். பேரின்பம் அது உம்மோடு
நான் கொண்டுள்ள நோக்கம், ஆசை என்பதனால்,
மனமகிழ்ச்சியோடு அவ்வொரு நாளும் உமது நாமத்தைத்
தொழுதுகொண்டு மகிழ்ந்திருக்க செய்வதற்காக ஸ்தோத்திரம்.
எல்லாவற்றிற்காகவும் உமக்கு நன்றி. ஆமென். அல்லேலூயா.

13 Nov 2008

நித்திய பிதாவே, சத்திய தேவனே, சகலமும் படைத்தவரே, சர்வ வல்லவரே
உமக்கு என் காலை நேர ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கின்றேன்.
உம்மிடத்தில் எனக்கு ஆறுதலும், இளைப்பாறுதலும் உண்டே?!
பாதாள வாசல்களை கட்டி உடைத்து பரலோகத்திற்கு நடத்தினவரும் நீரே!
நீர் ஒருவரே அல்லாமல் வேறு யார் மெய்யான தெய்வம்?!
ஆண்டவரே, அவின் நாதரே, அகிலத்தை அரசாள்பவரே
உமக்கு என் காலை நேர நன்றி பலிகளை சொல்லி மகிழ்கின்றேன்.
உம்மிடத்தில் எனக்கு ஜீவனும், சுதந்திரமும் உண்டே?!
மரண வழிகளை என்னைவிட்டகற்றி ஜீவ பாதையில் நடத்துவர் நீரே?!
நீர் ஒருவரே அல்லாமல் வேறு யார் மெய்யான தெய்வம்?!
பரிசுத்தரே, பரிகாரியே, நமக்காக பலியானவரே
உமக்கு என் காலை நேர துதிகளை அடிபணிந்து செலுத்துகின்றேன்
உம்மிடத்தில் எனக்கு அமைதியும், சமாதானமும் உண்டே?!
துன்மார்க்க வழியை அகற்றி சன்மார்க்கத்தை தந்தவர் நீரே!
நீர் ஒருவரே அல்லாமல் வேறு யார் மெய்யான தெய்வம்?!
போதகரே, மேய்ப்பரே, மெய்யான சுகம் தருபவரே
உமக்கு என் காலை நேர பரிசுத்த அர்ப்பணத்தை தருகிறேன்
உம்மிடத்தில் எனக்கு போதுமான தயையும், இரக்கமும் உண்டே?!
மூடத்தனத்தை என்னைவிட்டகற்றி ஞானத்தை தந்தவரும் நீரே!
நீர் ஒருவரே அல்லாமல் வேறு யார் மெய்யான தெய்வம்?!
யெகோவா ஷம்மா, யெகோவா நிசியே, யெகோவா ஷாலோம்
உமக்கு என் காலை நேர ஆராதனையை படைக்கின்றேன்
உம்மிடத்தில் எனக்கு கிருபையும், அன்பும் உண்டே?!
அக்கிரம சிந்தைகளை என்னைவிட்டகற்றி நீதியின்படி வாழச் செய்பவரே
நீர் ஒருவரே அல்லாமல் வேறு யார் மெய்யான தெய்வம்?!
யெகோவா ரப்பா, யெகோவா ரோவா, யெகோவா ஏலோஹே
உமக்கு என் காலை நேர சங்கீத பாடல்களை படைக்கின்றேன்
உம்மிடத்தில் எனக்கு ஜீவனும், நித்தியமும் உண்டே?!
பாவத்தை என்னைவிட்டகற்றி பரலோக வாழ்வை தந்தவரும் நீரே!?
நீர் ஒருவரே அல்லாமல் வேறு யார் மெய்யான தெய்வம்?!
எபிநேசரே, எல்லெலியோன், எல்ஷடாய்
உமக்கு என் காலை நேர காணிக்கைகளை செலுத்துகிறேன்
உம்மிடத்தில் எனக்கு பரிசுத்த ஆவியும், சத்திய ஆவியும் உண்டே
மாம்சத்தின் படி வாழ்வை விலக்கி ஆவியின்படி நடக்க செய்கின்றீர்
நீர் ஒருவரே அல்லாமல் வேறு யார் மெய்யான தெய்வம்!?
நீர் ஒருவரே அல்லாமல் வேறு யார் பரிசுத்த தெய்வம்!?
நீரே நீர் மாத்திரம் தெய்வமும், பரிசுத்தமும். ஆமென்.

15 Nov 2008

தேவனே. என் தேவா இணை உள்ளம் உடையவரே, அதிசயமானவரே
உம்மை போற்றி போற்றி, புகழ்ந்து புகழ்ந்து, மகிழ்ந்து துதிக்கின்றேன்
என்றென்றும் எந்நாளும் எப்பொழுதும் உமது நாமத்தை நம்பியிருக்கிறேன்.
என் கண்களுக்கு ஒளியைத் தந்து, காலின் நடக்கும் பாதையைத் தந்தீர்
உலகத்தில் ஞானிகளை பைத்தியமாக்குவதற்கு பைத்தியமான என்னை தெரிந்தெடுத்தீர்.
இறைவா, உம்முடைய நீதியின் செங்கோல் இவ்வுலகத்தை ஆளட்டும்
உம்முடைய சத்தியத்தினால் இப்புவி மாந்தர்கள் கிருபை பெறட்டும்.
இறைவா, உம்மைப்போல யாருமில்லை எங்களை நேசிப்பதற்கு.
உம்மையன்றி வேறொரு தெய்வமில்லை எங்களை இரட்சிப்பதற்கு.
காலை தோறும் புதிய கிருபையைத் தருகின்றீர் நன்றி சொல்லுவேன்.
நித்திய காலமாய் நிம்மதி பெறுவதற்கு வேண்டுகின்றேன். தருவீர் நீர்.
ஆண்டவா, உம்முடைய ஆலயத்திலோ? உமது பிரசன்னத்திலோ?!
நான் எப்போதும் காத்திருக்கின்றேன். காத்தாமல் வாழ்ந்திருக்கின்றேன்
மெய்யான தெய்வம் நீரே, மகிமையின் ராஜாவும் நீரே.
அகிலம் முழுமைக்கும் அரசாள வல்லமை கொண்டிருப்பவரே,
உம்முடைய ஜீவனுள்ள வார்த்தைகளை கொண்டு ஜீவனடைந்திருக்கிறேன்
நீடிய காலமாய் உமக்கே என் துதிகளை செலுத்தி வருகின்றேன்.
ஆனாலும் எத்தனை துதிகள் ஏறெடுத்தாலும் அது போதாதைய்யா,
எனக்காய் கல்வாரியில் நீர் சிந்தின இரத்தத்தை மறப்பேனோ!
அங்கே நீர் நொறுக்கப்பட்ட காரணத்தை நான் அறிவேனே!
ஆண்டவா, உம் திருப்பாதம் அமர்ந்து நான் அழ வேண்டும்.
என் கண்ணீரால் உம் பாதத்தை நனைக்க வேண்டும்.
பரிசுத்தரே, உம்மை நான் முழுவதும் முத்தம் செய்ய ஆசை?
இவ்வளவு நாட்கள் கடந்தும், உமது மெய்யான அன்பை அறிய?
உமது அன்பை முழுமையாக அறிய இன்னும் நாட்கள் உண்டே,
தேவனுடையவர்களுக்கெல்லாம் என் தெய்வம் நீர் தேவனாய் உள்ளீர்
மெய்யான தேவனாம் நீரே நீர் மாத்திரம் பெரியவர்.
அநாதி தேவவர், உமது மேலான மகிமையை உயர்த்துகின்றேன்
வல்லமையான அடையாளங்கள் செய்து வருபவர்
இந்த மாம்சத்தையும், சாத்தானையும், உலகத்தையும் வெல்ல
அவர் தரும் உன்னதத்தின் பெலனே போதுமானது.
இறைவா, உம்முடைய கிருபையே எங்களை தாங்குகின்றது.
உம்முடைய நீடிய நித்திய கிருபையினால் மகிமை பெற்றோர்
எப்பொழுதும் நீரே ஆதியும் அந்தமுமாய் இருக்கின்றீர்.
எதுவும் உம்மாலே அன்றி வேறொருவரால் படைக்கப்படவில்லை.
நீரே உம் வார்த்தையை அனுப்பி இப்பிரபஞ்சத்தை படைத்தீர்.
எல்லாவற்றிற்காகவும் உமக்கு ஸ்தோத்திரம். ஆமென்.

16 NOV 2008

எல்லாம் வல்ல தெய்வமே, எல்லாருக்கும் பரிபூரணமாய் தந்தருள்பவரே,
இறைவா, எனக்கு ஞானத்தை தந்தருளும். அறிவைப் பெருக்கிடும்
நற்செய்திகளை பேச செய்யும், உண்மைகளால் என் வாயை திறவும்
இறைவா, மூடர்களின் பேச்சை நான் கேட்காமல்
நித்திய வார்த்தைகளை தியானிக்க செய்யுமே இறைவா
இறைவா, பொறாமையை என்னை விட்டகற்றி போட்டு
மெய்ப்பொருளாம் உம்மேல் என் பார்வை பதிந்திருக்கச் செய்யும்.
அப்பா, என் இயேசு நாதரே, உம்மேல் நான் சார்ந்திருக்கச் செய்யும்.
கிருபை நிறைந்தவரே, நித்தியமானவரே ஏக சக்ராதிபதியே
உம்மையே நான் என் மணவாளனாய் ஏற்றுக்கொண்டேன்.
இறைவா, உமக்கு பயந்திருப்பதையே நான் விரும்புகிறேன்.
மனிதன், உலகம், எதிரிகள், சாத்தான் இவைகளைக் கண்டு அஞ்சுவதில்லை
இயேசுவே, உமக்கு மாத்திரமே பயந்திருக்கின்றேன்.
இறைவா, உம்முடைய வார்த்தைகளை கீழ்ப்படிந்து நிறைவேற்ற செய்யும்
உமக்கு கீழ்ப்படிதலைக் காட்டிலும் வேறொன்றும் உத்தமமில்லை.
அன்பே உருவானவரே, உமது வார்த்தைக் கைக்கொள்ள செய்யும்
அப்பா பிதாவே, அன்பே தேவனே, அருமை இரட்சகரே
உமக்கு பிரியமானதை செய்ய எனக்கு தைரியத்தைத் தாருமே
ஆண்டவரே, மெய்யாகவே மெய்யாகவே நீரே தெய்வம்
உம்மைப்போல மெய்யாகவே மெய்யாகவே வேறு யாருமில்லை
உம்மையன்றி மெய்யாகவே மெய்யாகவே பரிசுத்தர் இல்லை.
அதிசயமானவரே, அற்புதம் செய்பவரே அருமை மீட்பரே
அல்லேலூயா துதி மகிமை, ஆண்டவரே நீரே பாத்திரர்
உம்மை மகிழ்ச்சிப்படுத்த என்னால் கூடுமோ?!
உம்மை நான் உமக்கு பிரியமானவளாய் இருந்திட வேண்டுமே.
ஆண்டவரே, அகிலம் முழுமைக்கும் சொந்தக்காரரே
திராட்சை தோட்டக்காரரே, ராஜ்யத்தின் அதிபதியே
உமக்கு கனிகளை தருபவளாய் என்னை நீர் மாற்றுமே.
மனிதனை அல்ல, உமக்கு பிரியமானதைச் செய்ய வேண்டுகிறேன்.
ஆண்டவரே, எல்லாருக்காகவும் எப்பொழுதும் வேண்டுதல் செய்யணுமே!
உயர்ந்தோர்க்காகவும், தாழ்ந்தோர்க்காகவும் ஜெபம் செய்யணுமே!
திறப்பின் வாசலில் நிற்கணுமே! திரளான ஆத்துமாக்களை சந்திக்கணுமே!
இல்லை என்றும் அன்றி உமது ஊழியத்தை நிறைவேற்றணுமே!
மகிமையான உம்முடைய ஜீவ வார்த்தைகளை உச்சரிக்கணுமே
உண்மையாக, ஆவியோடு உம்மை தொழுதுகொள்ளணுமே!
நீதியின் வழியும், நியாயத்தின் பாதையும் நடந்து ஜெயிக்கணுமே
அப்பா தேவா உம்மை எப்பொழுதும் நமஸ்கரிப்பேன். ஆமென்.

17 Nov 2008

தெய்வமே, உமக்கு என் காலை நேர ஸ்தோத்திர பலிகளை செலுத்துகின்றேன்.
இறைவா. மரித்து போகின்ற மாம்சத்தின் மேல் என் பிரியம் போகாதபடிக்கு
என்றும் நித்திய ஜீவியமாய் நிலைக்கும் உம்மேல் நான் நோக்கமாயிருக்க வேண்டும்
அப்பா, உம்முடைய மெய்யான கிருபையால் அதை நான் பெற வேண்டும்
என்னோடு கூடவே நீர் இருக்கின்றீர். ஆனாலும் இன்னும் அதிகமாய்
என்னோடு கூடவே இருந்து என்னை வழிநடத்தும்.
ஏனென்றால் சில நேரங்களில் சாத்தானின் வஞ்சக மொழிகளை
என் இருதயம் கேட்கின்றதே. என் மனமும் அதனை நோக்குகிறதே.
இறைவா, அவன் எய்யும் பொல்லாத அஸ்திரங்களை என்னால் அல்ல
உம்மாலே, உம் சத்தியம் என்னும் மார்க்கவசத்தினால் என்னை பாதுகாக்கும்
இறைவா, நீர் என்னோடு எப்போதும் இருப்பீரென்றால்
நான் வஞ்சிக்கப்படாமல் சுகமாய் ஜீவிப்பேனே?!
இறைவா, உம்மோடு இருப்பதையே நான் வாஞ்சிக்கின்றேன்.
என்னோடு, மரணபரியந்தமும் நீர் இருப்பீர் தானே?!
இதோ மெய்யாகவே உம்மை நான் நேசிக்கிறேன்
தேவனே எந்நாளும் உம்மையே நான் துதி செய்வேன்.
காலங்கள் எதுவென்றாலும் சூழல்கள் கேட்கப்பட்டாலும்
எதையும் தாண்டி உம்மைப் போற்றி புகழ்ந்து பாடுவேன்
என் பாரங்கள் யாவும் என்னை கடந்து போய்விடும்
என் இயேசு நீர் என்னோடு இருந்துவிட்டாலே?!
இரட்சகரே, தினந்தோறும் என்னை நீர் இரட்சிக்க வேண்டுமே,
என் விருப்பங்களை தேவனே, உமக்கு சித்தமானால் நிறைவாக்கும்.
என் வேண்டுதல்கள் இயேசுவே, உமக்கு பிரியமானால் ஏற்றுக்கொள்ளும்
இறைவா, இன்னும் ஒரு படி உம்மை நெருங்கி கிட்ட வாஞ்சையே
நீர் பரிசுத்தர், ஒருவரும் நெருங்க முடியாத இடத்தில் உள்ளீர்,
இருப்பினும் அதன் பாதையில் என்னை முன்னேறி வரச் செய்யும்.
தேவனே, ஒளியின் பாதையில் என்னை நடத்திச் செல்லும்.
இயேசுவே, நான் எதனால் உம்மை உயர்த்திடுவேன்
என்னை நீர் உமதண்டையில் சேர்த்துக் கொள்வீர்.
பரிசுத்த ஆவியானவரே, உம்மாலே நான் இயேசுவை
கிறிஸ்து என்று அழைத்து, உண்மையுடன் தொழுது கொள்வேன்.
அவரையே என்றென்றும் என் தேவனாய் ஆராதிப்பேன்.
இதோ, உலகம் யாவையும் அழிந்து போனாலும்
அழியாத நீரோடை என் இயேசு இதோ ஜீவனுள்ளவர்.
நீர், நான் மரித்தாலும் உயிர் எழுப்பச் செய்வீர்
இதோ, உம்முடைய வருகைக்காக காத்திருப்போரில் நானும் ஒருவன்.
இறைவா வந்தென்னை அழைத்துச் செல்லும். ஆமென். அல்லேலூயா.

18 Nov 2008

அகிலம் அனைத்தையும் ஆளும் அரசரானவரே, அப்பா பிதாவே
இன்றைய ஸ்தோத்திர பலியோடு கூட உம் சந்நிதியில் வருகிறேன்.
அன்பே தெய்வமானவரே, உம்மை தெய்வமாகக் கொண்ட நான் பாக்கியவான்.
உலகிலே மெய்யான தெய்வத்தைத் தேடி அலைபவர்களுக்கு உம்மை
வெளிக்காட்டாமல் என்னில் அரிய வகையில் வெளிப்பட்டீரே நன்றி.
இறைவா, எங்கே போய் நான் சொல்வேன் நீர் செய்தவைகள் என்று?!
அதற்கு சாட்சியங்கள் சொல்லவும் நினைவுகள் தேவையில்லையே!
இயேசுவே நீர் சொல்லி கேட்டதை ஜனங்கள் நான் சொல்லி கேட்பார்களா?!
இல்லையப்பா, உணர்வில்லாதிருக்கும் இந்த ஜனங்களுக்காக
திறப்பிலே நின்று கதறி அழுது ஜெபிக்க வேண்டுமே!
எத்தனையோ கோடிகள் இவ்வுலகில் உம்மை அறியவில்லையே!
அன்பரே உமது அன்பை அவர்களுக்கும் வெளியரங்கமாகட்டும்
மெய் தேவனே, தேவாதி தேவனே என் வாழ்நாள் பாக்கியமே
உம்மை இன்னும் நெருங்கி கிட்டச் சேர வேண்டுமே!
அவ்வாறே நாடெங்கும் இயேசுவே உமது நாமத்தை உயர்த்த வேண்டுமே!
இரட்சகரே, இரட்சிப்பின் நாயகரே, சீக்கிரமாய் வரப்போகிறவரே
உமக்கு என் உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து நன்றியை செலுத்துகிறேன்.
தளர்ந்து போயிருக்கும் என் கைகளை பெலன் கொள்ளச் செய்யும்.
ஆவியால் சோர்ந்து கிடக்கும் மனத்தை உயிர்ப்பெறச் செய்யும்.
சோர்வுற்று கிடக்கும் என்னை சுகப்பெற்று ஜீவிக்கச் செய்யும்
இராஜா, உம்முன்னே நான் பரிசுத்தமாய் வாழச் செய்யும்.
உமக்காய், உமக்கு பிரியமான காரியங்களை செய்யச் சொல்லும்
வேண்டாத காரியங்கள் என் வாழ்க்கையை விட்டு அகன்று போகட்டும்.
வேண்டிய காரியங்கள் என்னில் என்றும் நிலைத்திருக்கட்டும்.
தேவனே, என் தேவா உம்மைப்போல அன்பு யாருமில்லை
எங்களை நேசிப்பதற்கும், எங்கள் மேல் அன்பாய் இருப்பதற்கும்
எங்களை பரிசுத்தமாக்குவதற்கும், எங்களை நடத்துவதற்கும்
உம்மை விட்டால் வேறு யார் எங்களுக்கு இருக்கிறார்கள்?!
நீரே, இயேசுவே நீர் மாத்திரமே, நித்தியமாய் வாழ்வு தருபவர்
உம்மை நினைக்கும் போதெல்லாம், என் மனம் அக்களிக்கின்றது.
உம்மை உயர்த்தும் போதெல்லாம், என் மனம் தாழ்மையடைகின்றது.
உம்மை மகிமைப்படுத்தும் போதெல்லாம், என் ஆவி பெலனடைகிறது.
உம்மை துதிப்பாடும் போதெல்லாம், என் ஆத்மா உம்மை துதிக்கிறது.
இறைவா, வேண்டுமே! இன்னும் தேவை தேவனே
உம்முடைய அன்பை ஒன்றே எங்களுக்கு போதுமானது.
ராஜாதி ராஜா, தேவாதி தேவா இன்னும் உன்னதரே
உம்மை போற்றி போற்றி மகிழ்ந்து பாட வேண்டும். ஆமென்.

19 Nov 2008

தெய்வமே, உம்முடைய ஸ்தோத்திரத்தினால் நான் மீண்டும் பிறந்தேன்
உம்முடைய ஆவியினால் நான் பரிசுத்த மாக்கப்பட்டேன்
உம்முடைய அக்கினியால் என் பாவங்கள் சுட்டெரிக்கப்பட்டன.
இறைவா, உம்முடைய வார்த்தை என்றுமாய் என் இருதயத்தில் எழுதும்
நீரே உம்முடைய வார்த்தையென்னும் மன்னாவை அருளி என்னை உயர்த்திடும்
அப்பா, உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டு வரும் ஒவ்வொரு வார்த்தையாலும்
நானும் என் ஜனங்களும் பிழைத்திடச் செய்யும்.
இவன் நினைத்த பக்தர்களுக்கெல்லாம் வெளிச்சத்தை தருகிறார்.
மரணப்பள்ளத்தாக்கில் தவித்திடும் மாந்தர்களுக்கெல்லாம் வழியை காட்டுகிறார்
இடுக்கமான வாசல் வழியாக அவர்களை பிரவேசிக்க செய்கிறார்
ஆனால், என் மாம்ச பலவீனங்களை என்னைவிட்டகற்றி விடுவிப்பீராக.
என் மாம்சம் என்னை பலமாக தண்டிக்கின்றது. இல்லையேல் தடுக்கின்றது
என்னால் பொறுக்க முடியவில்லை. ஆகையால் உம்மை இக்கிட்டுவதில்லை
இறைவா, சாத்தானால் கொண்டுவரப்படுகின்ற இத்தனைய தீவினைகளை
என்னை நான் அகற்றிக் கொள்ள எனக்கு அதிகாரத்தை தாருமே!
என்னை நான் எல்லாவித அபாயங்களுக்கும் விடுவித்துக் கொள்ள
என்னை ஸ்திரப்படுத்தி, உம் வார்த்தையினால் திடமாக்கிக் கொள்ள உதவி
எல்லாவித வியாதிகளுக்கும் என்னை நான் பாதுகாத்துக்கொள்ள
என்னை விடுவித்துக்கொள்ள அதிகாரத்தை கொடுத்துவிடும்.
உம்முடைய நாமத்தைக் கொண்டு என்னை நான் எல்லாவித
ஆபத்துகளிலிருந்தும், வியாதியிலிருந்தும், கண்ணிகளிலிருந்தும்,
மரண அபாயங்களிலிருந்தும், மாம்ச வேதனைகளிலிருந்தும்,
சாத்தானின் வஞ்சக பிடியிலிருந்தும், மனிதரின் வஞ்சகத்திலிருந்தும்
நாச மோசங்களிலிருந்தும், பிறரின் சாபங்களிலிருந்தும்
எல்லாவித பாவங்களிலிருந்தும், உமக்கு கீழ்ப்படியாமையைக்
கொண்டுவருகிற எல்லாவித கட்டுகளிலிருந்தும், வேதனை,
கஷ்டங்கள், கவலை, துர்ஆலோசனைகள், பிணிகள்,
அதிகாரிகள், கிரகங்கள், இச்சைகள், தொல்லைகள்
குறைத்தனங்கள், சிந்தனைகள், அந்தகாரங்களிலிருந்து
என்னை நானே முழுவதும் விடுவித்துக்கொள்ள
எனக்கு அதிகாரங்களை கொடுத்திடும்.
என்னை நான் முதலில் எல்லாவித தீங்கிற்கும் தப்பியோடி
உம் நாமத்தினால் வெற்றி பெறச் செய்யும்.
இறைவா, உம்மாலே நான் சகல காரியங்களையும்
வென்று, இவ்வுலகையும் அதின் இச்சைகளையும் வெறுக்கச் செய்ய
அப்பா, பிதாவே அன்பே உருவானவரே உமக்கு ஆராதனை
உமக்கு என் நன்றியினை கூறுகிறேன். ஆமென், அல்லேலூயா

20 Nov 2008

மகிமையின் தேவனே, பிரகாசிப்பிக்கிற ஒளியே, இரட்சகரே
காலை நேர ஆராதனையை உம் சந்நிதியில் அன்பாக வந்து செலுத்துகின்றேன்
உம்முடைய பிரசன்னத்தை எங்களுக்குத் தந்து எங்களை வழிநடத்தும்
இறைவா தேவனே, இராஜனே உம்மை துதிக்கின்றேன்.
இறைவா உம்மை உயர்த்த அந்த சிலுவை பயன்பட்டதாலோ
சிலுவை மரங்களும், குறிகளும் கனம் பெற்றன?!
ஆ... ஐயகோ. இதோ நானும் உம்மை உயர்த்துகின்றேன்
என்னையும் நீர் அதைப்போலன்றி மேலாக கனம் செய்வீர்.
மகிமையின் தேவனே, கலங்கிடும் என்னை கண்ணோக்கி பாரும்
தாவீது, வெற்றியாக தனிமையாக உம்மை நம்பி நின்றானே
உம்மையன்றி எனக்கு வேறு யார் தெரியும்.
நன்றாக, அதிகமாக எனக்கு பழக்கப்பட்டவர் நீர்தானே!!
தினந்தோறும் உம்மோடு பழகி வருகின்றேனே?!
இறைவா, உம்மையன்றி எனக்கு யாரும் சொந்தமில்லை
என்னோடு கூடவே இருக்கின்றீர். என்னை வழிப்படுத்துகிறீர்.
இராஜா உம் பிரசன்னம் எங்களுக்கு போதுமானதாகும்.
ஆயிரம் நாட்கள் எங்கேயும் சுற்றித் திரிந்து வாழ்வதைப்பார்க்கிலும்
ஒருநாள் பொழுதும் உம் பிரசன்னத்தில் சாய்ந்து மரித்துப்போவது சிறப்பாகும்.
இறைவா, உம்முடைய மகிமையை எனக்கு காண்பியும்
மோசே, எலியாவைப்போல உமக்கு உண்மையானவனாய் மாற்றும்
தானியேலைப்போல உமக்கு பிரியமானதைச் செய்பவனாய் என்னை மாற்றும்
உம்முடைய அன்பை எப்பொழுதும் எனக்கு வேண்டுமே
சோதனை நேரத்திலும், வேதனையின் துன்பங்களிலும்
ஆராதனை செய்வேன். செய்துகொண்டே இருப்பேன்.
இராஜா, உம் மகிமையால் எப்போதும் நான் துதித்திடுவேன்.
அனேக கண்ணீர்களோடு உம் சந்நிதியின் வருவேன்.
இறைவா, என்னை பரிசுத்தமாக்கும். ஒரு படி மேலே பரிசுத்தப்படுத்தும்.
கிருபை வரங்களைத் தாரும். ஒரு படி மேலே புத்திமையால் நிரப்பும்
இறைவா, உம் பிரசன்னத்தில் நடத்தும். ஒரு படி மேலே உம் பிரசன்னத்தால் மூடும்
அக்கினியால் என்னை அபிஷேகியும். ஒரு படி மேலே உம் அக்கினியால் அபிஷேகியும்
இராஜா, உம் மகிமையின் பிரசன்னத்தையே நான் நாடுகின்றேன்
உம் பரலோக பொக்கிஷங்களையே என்றும் நினைத்திருக்கின்றேன்
அவை யாவற்றையும் பெற்றுக்கொள்ள ஆசையாய் நிற்கின்றேன்.
இராஜா, உம் மகிமையின் செங்கோல் என்னை ஆளட்டும்.
இயேசுவே நீரே உம் கரங்களினால் என்றும் கேடகத்தால் காத்துக்கொள்ளும்
என்றும் நித்திய ஜீவிய காலமெல்லாம் உம்மையே பார்த்திருப்பேன்.
நன்றி. நன்றி. உமக்கே கோடி நன்றி. ஆமென். அல்லேலூயா.

22 Nov 2008

கண்மணிப்போல காப்பவரே, கல்வாரியில் என்னை காப்பாற்றினவரே,
உமக்கு என் காலை நேர ஆராதனை. காலை நேர துதிகள்
இறைவா, உமக்கு என்னை ஜீவபலியாக படைக்கின்றேன்.
மெய்யான தேவனே, மகிமையின் ராஜாவே, மகத்தான நேசரே
உம்மை என் மனம் ஒவ்வொரு நிமிடமும் ஏங்கித் தவிக்கின்றதே.
இதோ, உம்மைத் தொழுதிட என் உள்ளம் துடிக்கின்றது.
ஆனாலும் அமர்ந்திருந்து உம்மை தொலைவிலிருந்து அறிந்துக்கொண்டேன்
நித்திய காலமாய் உம்மைத் தேடுகின்ற யாவருக்கும் உம்மை
வெளிப்படுத்த சித்தமாய் இருக்கின்றீர். ஆசீர்வதிக்க ஆயத்தமாயிருக்கிறீர்.
மெய்யான தேவனே, நித்தம் நித்தம் உம் அன்பை நினைத்து போற்றுவேன்
யாருக்கும் கிடைக்காத அந்த நன்மையை எனக்கு கிடைத்தது.
உம்மை அறிவேன். உம் சித்தத்தையும் அறிய காத்திருக்கிறேன்.
என் மெய்ப்பனின் ரத்தத்தை அறியாத வெட்டு ஆடாய் நானிருந்தேன்
என் வழியை கர்த்தரே நீரே திறந்தருளும். என்னோடு மேலும்
காலங்களெல்லாம் உம் கரத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளன.
இறைவா, என்னுடைய காலங்களையும் கர்த்தரே நீர் கொண்டுள்ளீர்
எனக்காக நீர் வைத்துள்ள ஆசீர்வாதங்களை அதினதின் காலங்களில்
சரியாய் எனக்கு அளித்து, இனிமையாய் கொடுத்துக்கொண்டிருப்பவரே.
தெய்வமே, இன்னும் உம் அண்டையில் கிட்டச் சேர்ந்து எந்நேரமும்
உமக்கு துதியை ஏறெடுத்துக்கொண்டிருக்கவே ஆசைப்படுகிறேன்.
அன்பே உருவான தெய்வமே, அழகின் உருவே, அப்பா பிதாவே
அந்த பாக்கியத்தை பெறுகின்ற பாக்கியவானாய் என்னையாக்கும்
இவ்வுலகின் நான் பார்த்த நோக்கத்தை நிறைவாக்கும்,
நாளைக்கு நான் செல்லவிருக்கும் நேர்முகத்தேர்வை ஆசீர்வதியும்.
உமக்கு சித்தமானால் அவ்வேலையை வாய்க்கச் செய்யும்.
இறைவா, என்னை திடப்படுத்தும். என்னை நிலைப்படுத்தும்.
இம்மைச் சிந்தனையை என்னை விட்டகற்றி தெளிவுள்ளவளாக்கும்
இராஜா, உம்மையே நான் சார்ந்திருக்கச் செய்யும்.
தெய்வமே, என்னை உற்சாகப்படுத்தும். உற்சாகத்தின் ஊற்றாய் நீரும்
உம்மைப்போல யாருமில்லை என்னை இவ்வளவாய் நேசிப்பதற்கு
அன்பரே, அதிசயமானவரே அப்பா பிதாவே
உம்முடைய மொழியை ஏற்றுக்கொண்டேன். அது உம் சித்தம்
அவர் எனக்காவும், இவ்வுலகத்திற்காகவும் சிந்தின இரத்தம்
விலையேறப் பெற்றது என்றும் நான் அறிவேன்.
உம்மை அறிவேன். உம்மை மாத்திரம் அறிவேன்.
நீரே நித்தியமானவர். ஏக சத்தியசுபாவரானவர். உம்மை
நேசிக்கு காணிக்கையாய் மகிழ்ந்து போற்றுகின்றேன். ஆமென்.

29 Nov 2008

இராஜாதி இராஜா, தேவாதி தேவா உம்மை பாடி போற்றுகின்றேன்.
உம்மைத்தானே நான் எதிர்நோக்கி காத்திருக்கின்றேன்.
என் வாழ்நாளெல்லாம் நன்மையும் கிருபையும் எனக்கு தந்தீர்.
மறு ஜீவனை எனக்குள் வைத்து தினந்தோறும் வாழ வைக்கின்றீர்.
நீரே ராஜா, நீரே தேவன் நீரே கன்மலை உன்னதர்.
என்னை தலைதூக்கி நிறுத்தி வைத்தீர் நீர். வாலாக்காமல் தலையாக்கினீர்
உம்முடைய நேசத்தை நான் எண்ணியே துதித்திடுவேன்.
கன்மலையின் மேல் என்னை நீர் நிறுத்தியமைக்காய் ஸ்தோத்திரம்.
ராஜா, உம்மை நான் மகிமைப்படுத்தி துதித்து ஆராதிக்கின்றேன்.
என்னுடைய இந்த நாட்களில் என்னை பெலப்படுத்தியதற்காய் நன்றி.
அன்பவரே, உம்முடைய அநாதி ஸ்நேகம் என்னை ஆட்கொண்டது.
உம்முடைய சித்தம் என்னை தேற்றி வழிநடத்துகின்றது.
எங்களை தீர்மைத்து ஸ்திரப்படுத்தி காப்பாற்றி கைதூக்கி நிறுத்துகின்றீர்.
அன்பவரே, இன்றைக்கு நான் செல்லும் சோதனைகளை உமக்கு
உத்தமனாய் சகிப்பதற்கு அதனை கடந்து வெற்றியை எனதாக்கும்.
இறைவா, நான் ஒன்றும் அறியேன். என்னை மனதார நீர் வெளிப்படுத்தும்.
நீரே நீர் மாத்திரம் பேசிடும். நான் ஒரு ஊமையாக்காரன்.
மற்றைய ஆசைகளைப் போக்கி யதார்த்தமானதை பேச வையும்.
இன்றைக்கு நான் செல்லும் எல்லா பொழுதையும் நீர் சந்தியும்.
அப்பாவே! உமக்கு நிகரில்லை. எல்லா காரியமும் எனக்கு வாய்க்கும்.
ராஜா, உம் மாளிகையில் உமக்கு சாட்சியாக என்னை வாழ வையும்.
அன்பவரே, அதிசயமானவரே, அன்பே உருவானவரே
உம்மை நான் ஸ்நேகிக்கின்றேன். உம்மை விரும்புகின்றேன்.
உம்முடைய மகிமையில் பிரவேசிக்கவே விரும்பி அழைக்கிறேன்.
இவ்வுலகப் பொருளையல்ல, உம் ராஜ்யத்தையே வாஞ்சிக்கின்றேன்.
இறைவா, என்னுடைய தற்போதைய வாழ்க்கைத் தரத்தை நோக்கும்.
வெய்யிலிலும், சாக்கடை சூழ்ந்த இடத்திலும் வாழுகின்றேன்.
குடிகாரர்கள், கொலைகாரர்கள், சூதாட்டக்காரர்கள்,
வேசிப்பிரியர்கள், பொய்புரட்டர்கள், திருடர்கள்,
ஏமாற்றுபவர்கள் மத்தியில் அல்லவோ வாழுகின்றேன்.
இறைவா, எனக்கு எப்போது இதிலிருந்து விடுதலை?!
நாற்பது வருடங்களோ?! நான்கைந்து வருடங்களோ?!
நான் அறியேன். நீர் மாத்திரம் அதை அறிவீர்.
என் நிந்தையை என்னைவிட்டு அகற்றிப் போட்டுவிடும்
என் பாவங்களை என்னைவிட்டு தொலைவாக்கிடும்.
உமக்கு என்றும் எப்பொழுதும் எங்கேயும் நன்றிபலி செலுத்துவேன்.
இறைவா, அன்பர் நீர் தானே! மெய்யான பரம்பொருளே! ஆமென்.

14 Nov 2008

கல்வாரி காதலே, தந்தை பிதாவே, எனது நேசமான தெய்வமே
நீரும் உம்மை போன்று, நீங்கள் உலகில் தந்தனை ஒளியேபோல்.
எப்பொழுதும் உம் பரலோகம் என்னைச்சுற்றி நிறைந்திருக்க விரும்புகிறேன்
உம் வாயில் இருந்து வெளிவந்த ஜீவ வார்த்தைகளைப் போலவே
என் வாயிலிருந்தும் உமது நாமத்தினால் ஜீவ வார்த்தைகள் வெளிப்பட வேண்டும்
இறைவா, சிந்த இறையில் உமது இரத்தத்தினால் இதய சுத்தம் வேண்டும்.
உம்முடைய நாமத்தை சரியான விதத்தில் தானதேர்ந்து போற்ற வேண்டும்.
பாத்திரத்தின் அளவை அறிந்து அவற்றைக் கலந்து காக்க வேண்டும்
கிட்டாத தேனினை அவர்களுக்கு தினந்தோறும் கொடுக்க வேண்டும்
இறைவா, என்றும் நெடிய வாழ்க்கையில் தெளிவுடன் இருக்க வேண்டும்
உம் தன்மையில் நாள்தோறும் காத்திருந்து உம் பிரசன்னத்தால் பெற வேண்டும்
இறைவா, உம்மை என்னில் ஏற்றுக்கொள்ள என் பாத்திரத்தை பெரிதாக்கும்
இறைவா, என் பாத்திரத்தை உம் தண்ணீரால் நிரப்பும்.
என் வாயிலிருந்து உம்மை போற்றும் துதி என்றும் வெளிவரட்டும்.
ஆனால் உமையே நாடிக்கொள்ள வேண்டுகிறேன். அருள் ஞானம் தாரும்.
இறைவா, உம்மைப் போல பரிசுத்தம் இங்கு யாருக்கு உண்டு?!
ஒரு சிறு அளவு எனக்கும் அந்த பரிசுத்தம் வேண்டும்!!
என்னை பரிசுத்தமாக்கும். தூய்மையாக்கும். அனுதினம் நடத்திடும்
இறைவா, உம்மை எப்போதும் நான் மறவேன். உம் கிருபை பெரியது
தேவனே உம்மையன்றி எனக்கு இவ்வுலகில் ஒன்றும் சொந்தமில்லை.
நீரே, நீர் மாத்திரம் எனக்கு போதும். நீர் எனக்கு தந்த ஆசீர்வாதங்களுக்காய் நன்றி
எப்பொழுதும் உமக்கு நன்றி. என்றென்றும் உமக்கே நன்றி.
நன்றி. நன்றி. நன்றி. நன்றி. நன்றி. நன்றி. நன்றி.
உம்மையே எக்காலத்துக்காய் நன்றி. நீரே நீரே பெரியவர்.
அற்புதர் நீர். அதிசயர் நீர். அன்பர் நீர். அன்பே நீர்.
உமக்கு என் ஸ்தோத்திர பலிகளை செலுத்தி மகிழ்கின்றேன்.
ஆகா என் தேவா, தந்தை பிதாவே, எங்கள் இரட்சகரே
ஆலோசனை கர்த்தரே. என் ஜீவ நாயகனே. என்னை தேற்றி மகிழ்கின்றீர்.
உமக்கென்று வாழ ஜெபித்திருந்தீர். உமது தெய்வம் கையில் வைத்தீர்.
உமக்கே ஆராதனை. உமக்கே ஸ்தோத்திரம். உமக்கே துதி மகிமை.
அல்லேலூயா சொல்லி பாடுவேன். ஆண்டவரை துதித்து போற்றுவேன்.
அப்பா இயேசு என்னை வழிநடத்திக்கொள்வார், உம்முடன்
நான் சேர்ந்து பறக்க தந்தையை நாடி இருப்பேன்.
என் பரம பிதா என்னை அன்போடு அணைத்துக் கொள்வார்,
அவருடைய சித்தத்தின் படி நான் வாழ வேண்டுகிறேன்.
அப்பா, உம்முடைய கிருபையாலே நான் வாழ விரும்புகிறேன்.
நன்றி. எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரம் செய்கிறேன். ஆமென்.

25 NOV 2008

மகிமை, மாட்சிமை நிறைந்தவரே; ஆயுதலை கொடுப்பவரே
அன்பான தெய்வமே, அதிசயமே, உம் அநாதி ஸ்நேகத்திற்காய் நன்றி.
நாள்தோறும் உம் திருச்சமூகத்தில் பக்தியோடு வந்து நிற்பேன்
காலை மாலை என்று பாராமல் உமக்காக காத்திருப்பேன்
கண்ணீர் கலந்த ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்பேன்
எல்லா கீர்த்திகளையும், நன்றிகளையும் உமக்கே செலுத்துவேன்
ஆராதனை. ஆராதனை. அன்பே உயர்வான இயேசு ராஜாவே
கவலை கஷ்டங்களை நான் தூக்கிப்போட்டு உம் பின்னே வருவேன்
உமது சிலுவையின் நிழலில் நான் தங்கி இளைப்பாறுவேன்
உமது அன்பை நினைத்து நினைத்து நான் மனத்தாழ்மையாவேன்.
உம்மை நினைத்து நான் ஏங்கி ஏங்கி காத்திருப்பேன்
உம் பாதங்களுக்காய் இரவும் பகலும் பாராமல் நோக்கியிருப்பேன்.
சிலகாலம் பலகாலங்கள் ஆனாலும் அதிகாலமே உம்மை தேடுவேன்
ஜாமம், நடுஜாமம் ஆனாலும் ஜாமங்களில் உம்மை தேடுகிறேன்.
ஆண்டவரே, தெளிவானாலும் இருளானாலும் அப்போதும் உம்மை பார்த்திருப்பேன்
நீதியின் சூரியன் நீர் என்மேல் உதிக்கவே விரும்புகிறேன்.
ஆவியிலே தொய்வு ஏற்படா வண்ணம் நாள்தோறும் புதிதாக்கும்
இறைவா, நித்தம் நித்தம் உம்மை நான் நேசிக்க விரும்புகிறேன்
தடையாக இருக்கும் என் பாவத்தை நீக்கி வாசம் செய்யும்
சாத்தானின் வஞ்சக வார்த்தைகள் என்னில் உயர் பெறாதிருக்கட்டும்
அவைகள் என்னை ஆக்கிரமம் செய்யாதிருக்கட்டும்.
இறைவா, நான் என்ன செய்வேன்?! என்னால் முடிவதுதான் என்ன
அப்பா பிதாவே, நன்றி சொல்லி நாள்முழுவதும் பலி செலுத்துவேன்
உம்மை நான் மகிமைப்படுத்தவே உலகத்தில் ஏக்கமாக இருக்கிறேன்
உம்மைவிட பெரியதாக எதையும் நான் எண்ண மாட்டேன்.
என்னையே தினந்தோறும் முழுவதும் உமக்கே தருகிறேன்.
இறைவா, செப்பனிடப்பட்ட உம் சித்தத்தை கேட்கும்
கீழ்ப்படிதலுள்ள ஆட்டுக்குட்டியாக என்னை நீர் மாற்றும்.
இயேசுவே, உம்முடைய கீழ்ப்படிதலை எனக்கும் கற்றுத்தாரும்.
பிதாவின் சித்தப்படி வாழ எனக்கு கிருபை தாரும்.
வல்லமை, அதிகாரம் யாவும் உமக்கே சொந்தமானதாக.
இறைவா, உம்முடைய அதிகாரத்தினால் என்னை ஆளும்.
என்னைச் சுற்றி உம்முடைய மகிமை என்றும் விளங்கட்டும்
நிகழ்காலம், எதிர்காலம் யாவும் நீர் நித்தம் செய்த காலமாகுமே?!
கடந்த காலம், காலங்கள் யாவும் உம் கரத்தில் அல்லவோ உள்ளன
இறைவா, அல்லேலூயா, அல்லேலூயா உம்மை துதி பாடுவேன்.
வானம் பூமி யாவும் படைத்த நல்லவரே உமக்கே ஆராதனை. ஆமென்.

அபிஷேகம் செய்கிறவரே, அபிஷேக நாதரே, அபிஷேகம் தருவீரே.
உம்முடைய வார்த்தைகளை செவ்வனே சொல்ல அபிஷேகம் செய்வீரே.
புதிய பாஷைகளில் உம் வசனங்களை சொல்ல அபிஷேகம் தருவீரே.
புதிய கிருபை வரங்களைத் தந்து என்னை அபிஷேகம் செய்வீரே.
அநேக ஊழியர்களுக்கும் கிருபை வரங்களைச் அபிஷேகிப்பீரே.
ஆண்டவா, தாவீதுக்கு கொடுத்த அபிஷேகத்தை எனக்கு தருவீரே.
அந்த கிருபையான அபிஷேகத்தை எனக்கு தந்து ஆசீர்வதிப்பீரே.
எலியாவின் அபிஷேகத்தை காட்டிலும் இரு மடங்கு அபிஷேகம்
எலிசாவுக்கு கொடுத்ததைப் போல, எலிசாவின் அபிஷேகத்தை காட்டிலும்
நான்கு மடங்கு அபிஷேகம் எனக்கு தந்து பாத்திரத்தை நிரப்புவீரே.
தீர்க்கதரிசனத்தின் அபிஷேகத்தை எனக்கு தந்து என்னை தீர்க்கதரிசியாக்கும்
ஞான வரத்தின் அபிஷேகத்தினால் என்னை நிரப்பி ஞானவானாக்கும்
அறிவும், புத்தியும் நிறைந்த அபிஷேகத்தினால் முற்றிலும் என்னை நிரப்பும்
சுகத்தை தருவதற்கான அபிஷேகத்தினால் என்னை பூரணமாக்கும்
அற்புத அடையாளங்களை செய்கின்ற அபிஷேகம் எனக்கு வேண்டுமே
இன்னும் அதிகமான அந்நிய பாஷைகளை பேசும் அபிஷேகம் எனக்குத் தாரும்
அதனை வியாக்கியானம் செய்ய அதிகமான அபிஷேகம் எனக்கு வேண்டும்
தேவனே, பிசாசுகள் நடுநடுங்குகின்ற அளவிற்கு எனக்கு அபிஷேகம் வேண்டும்
ஆவிகளை பகுத்தறியும் வரத்தின் அபிஷேகத்தினால் என்னை நிரப்பும்
விசுவாசத்திலே இன்னும் பல படிகள் கடந்து வர அபிஷேகத்தை தந்திடும்
இறைவா, இவ்வுலகில் வெற்றிகரமான மனிதனாக என்னை அபிஷேகம் செய்யும்
பரலோக பந்தயத்திலே வெல்லக்கூடியவனாக அபிஷேகம் செய்யும்.
கட்டுண்டவர்களுக்கு விடுதலையை அளிக்கும் அபிஷேகம் எனக்கு வேண்டுமே
திக்கற்றோர்களுக்கு அபிஷேகம் பராமரிக்க அபிஷேகம் அபரிமிதமாய் வேண்டும்
இவ்வுலகின் மன்னர்களுக்கும், ஆளுநர்களுக்கும் முன்பாய் நின்று
உம் நாமத்தை மகிமைப்படுத்தி மெய்ஞானத்தை உரைக்க அபிஷேகம் வேண்டும்
இறைவா, இயேசுவே, உமக்கு தேவன் கொடுத்திருந்த ஆவியைக்
காட்டிலும் இரு மடங்கு அபிஷேகம் எனக்கு வேண்டுமே.
அப்பா, உம் சித்தம் செய்ய எனக்கு அதின் அபிஷேகம் வேண்டும்.
உம்முடைய மெய்யான அன்பை அறிய இன்னும் அபிஷேகம் தேவை.
ஆண்டவா, மற்றவர்களை அபிஷேகத்தினாலே நடத்த அபிஷேகம் தேவை.
உம்முடைய சத்தத்தை கேட்கும் அபிஷேகம் எனக்கு தேவை.
உம்மை தரிசிக்க என் கண்களுக்கு அபிஷேகம் அதிகம் தேவை.
உம்மை ஆராதிக்க என் உதடுகளுக்கு அபிஷேகம் அபரிமிதமாய் தேவை
உம் சேவை செய்ய கை, கால்களுக்கு அபிஷேகம் அளவுகடந்து தேவை.
எப்பொழுதும் உம் அபிஷேகம் எனக்கு தேவை. தேவை. தேவை.
என்னை அபிஷேகியும். ஆசீர்வதியும். ஆளுகை செய்யும். ஆமென்.

26 NOV 2008

இறைவா, மெய்ப்பொருளாம் உம்மை அறியும் அறிவே எனக்கு வேண்டும்
அதின் வழியே நான் நடக்க செல்ல அபிஷேகம் எனக்கு வேண்டும்
உமக்கு பயந்திருத்தலே ஞானத்தின் ஆரம்பம், ஆகவே
உமக்கு கீழ்ப்படிந்து நடக்க கீழ்ப்படிதலின் அபிஷேகத்தினால் என்னை நிரப்பும்
சீஷர்களுக்கு நீர் கொடுத்த இறைமையான அபிஷேகத்தைப் போல
பல மடங்கு இறைவனை அபிஷேகத்தை பெற நான் காத்திருக்கிறேன்.
இறைவா, இதையே உம்மிடம் விண்ணப்பமாக வைக்கிறேன்.
உமக்கு சித்தமானால் இந்த இறைமையான அபிஷேகத்தினால் என்னை நிரப்பும்
ஆண்டவரே, அனைவரை உம் வழியில் சரியாய் நடத்த அது உதவுமே!
இயேசுவே, நீடிய நாட்களாய் நான் உம்மிடம் கேட்டு வருகிறேன்.
அதை நான் பெற்றுக்கொண்டேன் என்று உறுதியாய் நிச்சயித்திருக்கிறேன்
அப்பா எல்லாம் உமக்கே சொந்தமாக கொடுக்கிறேன்.
அதை எனக்கு தந்தவர் நீர்தானே என்று யாவருக்கும் சொல்வேன்.
அறிவும், ஞானமும் மகிமையும் எல்லாம் உமக்கு சொந்தமைய்யா!
இயேசுவே உம்மை உயர்த்துகின்ற துதியின் அபிஷேகம்
என் நாவில் என்றென்றும் இருப்பதாக. அதுவே நிரந்தரம்.
என் ஆவி எப்பொழுதும் உம்மை பரிசுத்தர் பரிசுத்தர் என்று துதிப்பதாக.
என் ஆத்துமா எப்பொழுதும் உம்மை உயர்த்துகின்ற துதியால் நிறைந்திருப்பதாக
ஆண்டவரே, தினந்தோறும் உம்மை நான் சார்ந்திருக்கவே விரும்புகிறேன்.
எந்நிலையிலும் உமது அபிஷேகமின்றி நான் வாழ முடியாது.
இறைவா, என்னை முழுமையாக உம்மிடம் ஒப்புக்கொடுத்தேன்.
பாவங்களுக்கு நான் மரித்துப் போனேன். பரிசுத்தவாழ்வாய் வாழ்கிறேன்
என்னை எல்லாவித தீமைகளுக்கும் விலக்கி காத்துக்கொள்ளும்.
அப்பா, நான் முழுவதும் உம் பிரசன்னத்தில் மகிழ்ந்திருக்க ஆசைப்படுகிறேன்
எனக்கு அப்பாக்கியத்தை தருவீரோ? தாரும் அய்யா!!
அப்பனே, எல்லாருக்காகவும் ஜெபிக்க கிருபை தாருமே!
என் தேசம், என் ஜனங்கள், உமது ஜனங்கள் யாவரையும்
சந்திக்க என்னை ஆயத்தப்படுத்திடுமே! பரிசுத்தமாக்கிடுமே!
தேவனே, என் தேவனே எனக்கு உம்மை மிகவும் பிடிக்கும்
என் இராஜாவே உம்மையே என் வாஞ்சையாய் வைத்துள்ளேன்.
நீரே, நீர் மாத்திரமே என் அடைக்கலம் + உம்மையன்றி யார் எனக்கு சொந்தம் +
இறைவா, நான் உமக்கு பிரியமானவனா என்று நானறியேன்!
என்னை உமக்கு பிரியமானவனாய் மாற்றிடுமே.
உம் ஜீவனுள்ள வார்த்தைகளால் என்னை முழுவதும் நிரப்பிடும்.
நீரே நீர் மாத்திரம் போதும். உம் அபிஷேகம் எனக்கு வேண்டும்
உம் பாதையில் நான் நடக்க வேண்டும். நன்றி சொல்ல வேண்டும்
நன்றி. நன்றி. எல்லாவற்றிற்காகவும் நன்றி. ஆமென்.

27 Nov 2008

அன்பவரே, அயராங்களில் நீர் சிறப்பானவர். தேவதைகளிலும் நீரே பெரியவர்
அகிலத்தை படைத்தவர், உம் ஆதரவால் என்னை வாழ வைப்பவர்
நித்தியத்தில் என்னை புண்ணகை சேர்ப்பவர். தேவாதி தேவனவர்
உமக்கே ஆராதனையும், துமக்கே துதியும், மகிமை, மகிமையும்
அப்பா, உம்மை இன்றைக்கும் நான் வாழ்த்திப் போற்றுகிறேன்.
அப்பா, உம்மை என்றைக்கும் நான் ஆராதித்து வாழ்த்துகிறேன்.
நானும் என் வீட்டாரோவென்றால் கர்த்தரே உம்மையே சேவிப்போம்.
நானும் என் குடும்பமும் கர்த்தரே உம்மையே சேவிப்போம்.
காலைதோறும் உம் சந்நிதியில் பக்தியோடு வந்து நிற்பேன்.
இறைவா, என்னை ஒரு புகுவாத அவதேகத்தினால் நிரப்பிடும்
இடைவிடாத ஆவேசத்தை வெளிப்படுத்த அப்பதைக் கூட்டுவதும் தந்திடும்.
இறைவா, உம் மகிமை ஒன்றையே விரும்புவனாக ஆக்கிடும்
என்னை அபிஷேகித்து, என்னில் இருக்கும் பயங்களை அகற்றி
உம்முடைய சாட்சியத்தை நிறைவேற்றி உம்மிடம் சேர்ந்திட வேண்டுகிறேன்.
ஆராதனை. இயேசுவே உமக்கே. ஆராதனை ஆராதனை உமக்கே.
அப்பா உம்மை நானே நம்புகிறேன். கைவிட்டு விடாதேயும்.
உம் பரணத்தையே பொருளாய் கொண்டிருக்கிற என்னை
உம் மகிமையால் நிரப்பாவிடும் பலன் பொருள் செய்யும்.
இறைவா சாட்சியத்தை செய்யும் போதெல்லாம் உம்முடைய ஆவியானவர்
உண்மையாய் இறங்கி வந்து வல்லமையாய் இறங்கவேண்டும்.
கட்டுண்டவர்கள் விடுதலையாக்கப்பட வேண்டும்.
குருடர்கள் உம்மை பெற்றுக்கொள்ள வேண்டும்.
அசுத்தஆவியர்கள் சமாதானடைய வேண்டும்.
பார்வையற்றோர் பார்வையடைய வேண்டும்.
முடவர்கள் எழுந்து நடக்க வேண்டும்.
செவிடர்கள் கேட்க வேண்டும். பேய்கள் ஓட வேண்டும்.
அசுத்த ஆவிகளை விரட்ட வேண்டும். உம் நாமம் உயர்த்த வேண்டும்
இறைவா, உம் வல்லமையை இவ்வுலக மனிதர்கள் காண வேண்டும்.
திறக்க வேண்டும். ஜெபிக்க வேண்டும். போராட வேண்டும்.
மன்றாட வேண்டும். திறப்பிலே நிற்க வேண்டும்.
இறைவா உம் ஆலயத்தில் நான் காத்திருக்க வேண்டும்.
தேவனே உம்மை நான் எப்பொழுதும் நினைப்பொழுதும் துதிக்க வேண்டும்.
அழகானவரே, அருமையானவரே அன்பே உறவானவரே
எத்தனை முறை உம்மை புகழ்பாடினாலும்
அத்தனை முறைக்கும் மேலேயும் உமக்கு புகழ் உண்டாவதாக.
நன்றி. நன்றி. எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்கிறேன்.
ஆமென். அல்லேலூயா. ஆமென் அல்லேலூயா.

07 Dec 2008

தேவனே உமக்கே என் துதிகளை ஏறெடுத்து ஆராதிக்கின்றேன்
உம்மைப் போல எனக்கு இவ்வுலகில் சிறப்பான சொந்தம் ஏதுவுண்டு?
இறைவா, உம்மையன்றி இவ்வுலகில் எனக்கு இன்பம் ஏதுவுண்டு?
ராஜாதி ராஜா, தேவாதி தேவா உம்மைப்போல இங்கு யாருண்டு?
நீரே அல்லாமல் தெய்வம் மகிமையாய் இவ்வுலகில் இறங்கி வந்ததுண்டோ?
தெய்வமே, உம்புகழ் பாட பாட மகிழ்ந்திட என்றுமே ஏங்குகிறேன்
இறைவா, அக்கினி மயமான தெய்வமே என்னை அக்கினி ஜுவாலையாக்கும்
அக்கினிக்கொப்பான மிகப்பெரிய மகிமையின் அக்கினியை உடையவரே
என்னை அதினால் பரிசுத்தப்படுத்திடும். அதினால் ஞானஸ்நானம் தாரும்.
இறைவா, ஒவ்வொரு நாளும் உம்முடைய அரவணைப்பை எனக்குத் தாரும்.
மகிமையும், மாட்சிமையும், நீங்காத அருளும் உமக்கே உரியதாகட்டும்
உம்மாலன்றி இவ்வுலகில் ஒன்றுமே நிலையாய் இயங்காதே!
மழையைப் பொழிகின்றீர், கதவுகளை திறக்கின்றீர், காற்றை அனுப்புகின்றீர்
பனியையும், மலையையும் அசைக்கின்றீர் அதிசயங்கள் செய்கின்றீர்
உம்முடைய அருளினையும், கிருபையினையும் நிலைபெறச் செய்கின்றீர்.
மகிமையானவரே, இயேசு நாதரே நம்பிக்கைக்கு உரியவரே!
நம்பி வந்தேன். உம்மை அகத்தில் ஏங்கி நிற்கின்றேன்.
நித்திய ராஜாவே, உம்முடைய தேவசந்நிதியில் காத்துக் கிடக்கின்றேன்
உம்முடைய பார்வை என் மீது படாதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.
உம்முடைய அக்கினி என்மேல் என்றென்றும் பற்றி எரிவதாகவே!
உம்முடைய பரிசுத்த அக்கினி, தெய்வீக அக்கினி, தேவ அக்கினி
இயேசுவின் அக்கினி, தேவனின் அக்கினி, பரிசுத்தரின் அக்கினி
சுட்டெரிக்கும் அக்கினி, சுடர்விட்டு பிரகாசிக்கும் அக்கினி, அதிசய அக்கினி,
பரலோக அக்கினி, தூய்மையின் அக்கினி, புதுமையான அக்கினி,
துதியின் அக்கினி, வார்த்தையின் அக்கினி, வல்லமையான அக்கினி
மகிமையின் அக்கினி, மாட்சிமையின் அக்கினி, அற்புத அக்கினி
ஆசீர்வாத அக்கினி, அபிஷேகிக்கும் அக்கினி, அன்பான அக்கினி
பட்சிக்கும் அக்கினி, பாவ கறை நீக்கும் அக்கினி, தீர்க்கதரிசன அக்கினி
ஞானத்தின் அக்கினி, அறிவின் அக்கினி, சுகம் தரும் அக்கினி
சாத்தானை பொசுக்கும் அக்கினி, அதிசய அற்புதங்கள் செய்யும் அக்கினி
அந்நிய பாஷைகளின் அக்கினி, உபவாசத்தின் அக்கினி, சக்தியும் அக்கினி
புடமிடும் அக்கினி, புத்தியைத் தருகின்ற அக்கினி, மகா அக்கினி
நீங்காத அக்கினி, நிம்மதியின் அக்கினி, சமாதான அக்கினி
பொறுமையின் அக்கினி, பொக்கிஷமான அக்கினி, தயவின் அக்கினி
சாந்தமான அக்கினி, தாழ்மையின் அக்கினி, சீனாயில் தோன்றின அக்கினி.
இஸ்ரவேலை வழி நடத்தின ஸ்தம்பமான அக்கினி, தேவனின் அக்கினி.
எல்லாவற்றிலும் சிறந்த அக்கினி என்னில் பற்றி எரிவதாக. தலைமுறைக்கும் தொடர்வதாக.
ஆமென்.

30 NOV 2008

நித்திய இரக்கமே நன்றி ஐயா. சத்திய தேவனே நன்றி ஐயா.
கண்மணிப் போல காப்பவரே, கல்வாரி நாயகனே, கிருபை பிதாவே
உமக்கே என்றென்றும் நான் மகிமை செலுத்துகிறேன்
ஆண்டவரே, அக்கினியாய் இருப்பவரே, அக்கினி ஸ்தம்பமே
அக்கினி ஜுவாலையான கண்களை உடையவரே
அக்கினி இதயத்தை உடையவரே, அக்கினி மயமான
சிங்காசனத்தில் வீற்றிருக்கின்றவரே, அரசாளுகின்ற தெய்வமே
அன்பான உம்முடைய கரங்களில் நான் அமர்ந்திருக்க ஆசைப்படுகிறேன்
உம் அக்கினியால் என்னை புடமிட்டுப் பாரும். தீயவை இருப்பின் பொசுக்கும்.
என்னை தங்கமாக மாற்றும். சொக்கத்தங்கமாக புடமிட்டு பயன்படுத்தும்.
இறைவா, உம்முடைய சத்தத்தை இன்னும் தெளிவாய் நான் கேட்க வேண்டும்
தரிசனங்களை நான் காண வேண்டும். இவ்வுலகை ஜெயிக்க வேண்டும்.
உம்முடைய நித்திய மகிழ்ச்சியின் தன்மையில் என்றும் இருக்க வேண்டும்.
உம் பாதத்தின் அருகே அமர்ந்து சுகந்த வாசனையான
சங்கீதப் பாடல்களை உமக்கு காணிக்கையாக்கி மகிழ வேண்டும்.
ஆராதனை இயேசுவே! உமக்கே ஆராதனை! என்றென்றும்.
உம்முடைய ஆலயத்தின் வாசலின் அருகில் அமர்ந்திருந்து
உமக்கு ஊழியம் செய்ய வேண்டும். உம் மகிமையை காண வேண்டும்.
தேவனே, மெய்யான இரக்கமே உமக்கே நான் துதியை செலுத்துகிறேன்
இறைவா, ஏழைகளை கண்ணோக்கி பாருமைய்யா!!
அவர்களுக்கு வேண்டிய அப்பங்களை அவர்களுக்கு தந்தருளும்.
சமாதானத்தை என்றும் அவர்களுக்கு கொடுத்து பாதுகாத்து வழிநடத்தும்
உம்முடைய நித்திய இராஜ்ஜியத்தில் யாவரையும் சேர்த்துக் கொள்ளும்.
அப்பா உம்மை நான் துதிக்க போற்றி துதிப்பது எவ்வளவு இன்பம்
ஆண்டவரே, அந்த பாக்கியத்தை எனக்கு தந்தமைக்காக ஸ்தோத்திரம்.
இன்னும் ஓயாமல் உம்மை துதிக்க வேண்டும். ஜெபிக்க வேண்டும்.
இப்புவியை இயேசுவே உமது நாமத்தினால் அசைக்க வேண்டும்.
இப்புவி மாந்தர்களுக்கு உமது நாமத்தை கொண்டு செல்ல வேண்டும்.
பற்பல தேசங்களுக்கு செல்ல வேண்டும். உமக்கு சாட்சியாக
எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின்
எல்லை பரியந்தமும் விளங்கி வாழ வேண்டும்.
இறைவா, மகிமையான உம் முகத்தை எப்பொழுதும் நான் காண வேண்டும்
நீர் படைத்த இவ்வுலகின் இயற்கையின் மகிமையை காண வேண்டும்
அதைக்கண்டு அதனைப்படைத்த உம்மை ஸ்தோத்தரிக்க வேண்டும்.
இறைவா, எனக்கு இன்னும் உமது அபிஷேகம் அதிகம் தேவை.
துக்கத்தடைகளை நொறுக்கி, சாத்தானின் கிரியைகளை அகற்றி
உம் பரலோக ராஜ்ஜியத்தை இவ்வுலகில் காணச் செய்யும். ஆமென்.

30 Nov 2008

நித்திய இராஜாவே நன்றி ஐயா. சத்திய தேவனே நன்றி ஐயா.
கண்மணிப்போல காப்பவரே, கல்வாரி நாயகனே, கிருபை நிறைவே
உமக்கே என்றென்றும் நான் மகிமை செலுத்துகிறேன்
ஆண்டவரே, அக்கினியாய் இருப்பவரே, அக்கினி ஸ்தம்பமே
அக்கினி ஜுவாலையான கண்களை உடையவரே
அக்கினி இடையை உடையவரே, அக்கினி மயமான
சிங்காசனத்தில் வீற்றிருக்கின்றவரே, அரசாளுகின்ற தெய்வமே
அன்பான உம்முடைய கரங்களில் நான் அமர்ந்திருக்க ஆசைப்படுகிறேன்
உம் அக்கினியால் என்னை புடமிட்டுப் பாரும். தீயவை இருப்பின் பொசுக்கும்.
என்னை தங்கமாக மாற்றும், சொக்கத்தங்கமாக புடமிட்டு பயன்படுத்தும்.
இறைவா, உம்முடைய சத்தத்தை இன்னும் தெளிவாய் நான் கேட்க வேண்டும்
தரிசனங்களை நான் காண வேண்டும். இவ்வுலகை ஜெயிக்க வேண்டும்.
உம்முடைய நித்திய மகிழ்ச்சியின் கரையில் என்றும் இருக்க வேண்டும்.
உம் பாதத்தின் அருகே சாந்த சுகந்த வாசனையான
சங்கீதப் பாடல்களை உமக்கு காணிக்கையாக்கி மகிழ வேண்டும்.
ஆராதனை இயேசுவே! உமக்கே ஆராதனை! என்றென்றும்.
உம்முடைய ஆலயத்தின் வாசலின் அருகில் அமர்ந்திருந்து
உமக்கு ஊழியம் செய்ய வேண்டும். உம் மகிமையை காண வேண்டும்.
தேவனே, மெய்யான இராஜனே உமக்கே நான் துதியை செலுத்துகிறேன்
இறைவா, ஏழைகளை கண்ணோக்கி பாருமய்யா!!
அவர்களுக்கு தேவையான அப்பங்களை அவர்களுக்கு தந்தருளும்.
சமாதானத்தை என்றும் அவர்களுக்கு கொடுத்து பாதுகாத்து வழிநடத்தும்
உம்முடைய நித்திய இராஜ்ஜியத்தில் யாவரையும் சேர்த்துக்கொள்ளும்.
அப்பா உம்மை நான் துதிக்க போதாது துதிப்பது எவ்வளவு இன்பம்
ஆண்டவரே, அந்த பாக்கியத்தை எனக்கு தந்தமைக்காக ஸ்தோத்திரம்.
இன்னும் ஓயாமல் உம்மை துதிக்க வேண்டும். ஜெபிக்க வேண்டும்.
இப்புவியை இயேசுவே உமது நாமத்தினால் அசைக்க வேண்டும்.
இப்புவி மாந்தர்களுக்கு உமது நாமத்தை கொண்டு செல்ல வேண்டும்.
பல்வேறு தேசங்களுக்கு செல்ல வேண்டும். உமக்கு சாட்சியாக
எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின்
எல்லை பரியந்தமும் விளங்கி வாழ வேண்டும்.
இறைவா, மகிமையான உம் முகத்தை எப்பொழுதும் நான் காண வேண்டும்
நீர் படைத்த இவ்வுலகின் இப்புவியின் மகிமையை காண வேண்டும்
அதைக் கண்டு அதனைப் படைத்த உம்மை ஸ்தோத்தரிக்க வேண்டும்.
இறைவா, எனக்கு இன்னும் உமது அபிஷேகம் அதிகம் தேவை.
ஆத்துமாக்களை இரட்சித்து, பிசாசின் கிரியைகளை அகற்றி
உம் பரலோக ராஜ்ஜியத்தை இவ்வுலகில் காணச் செய்யும். ஆமென்.

01 DEC 2008

மெய் பொருளே, பரம் பொருளே, பரிசுத்தத்தில் நிறைந்தவரே ஸ்தோத்திரம்
உம்மை நான் வாழ்த்தி உம்முடைய நாமத்தை உயர்த்துகிறேன்.
இறைவா உமது நாமம் ஒன்றே எனக்கு அருளாய் கொடுக்கப்பட்டுள்ளது
ஆண்டவரே, உம்முடைய மகிமையை இன்றைக்கு விளங்கச் செய்யும்
அக்கினி மயமானவரே, உம் அக்கினியை இறக்கிடும்
அக்கினி உருவானவரே உம் அக்கினியால் என்னை நிரப்புமே
நித்தமும் உம் நாமம் மகிமைப்படட்டும். உம் நாமம் வாழ்க
சத்திய நாதனே, நித்திய தேவனே வாழ்க உமது இராஜ்யமே.
நான் சர்வ லோகத்திற்கும் அதிபதியாகிய தேவனின் அடியவன்.
தன் ஒரே பேரான குமாரனின் இரத்தத்தினால் கழுவப்பட்டவன்.
இராஜாதி இராஜா, தேவாதி தேவனின் ஊழியக்காரன் நான்.
அவருடைய தேசத்தில் அவருக்கு நான் சொந்தக்காரன்.
மகிமை நிறைந்தவரே, உம்முடைய தூய மகிமையே
என் மேல் இறங்கி வந்திடுமே. பரிசுத்தத்தை தரிப்பாக்குமே.
உம்முடைய சமூகத்தில் அதிகாலமே வந்து நின்று உம்மை தொழுது கொள்வேன்
உம்முடைய பிரகாரங்களில் நித்தமும் ஓயாமல் துதிகளை ஏறெடுப்பேன
உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைக் காண மனத்தாழ்மையோடு வருவேன்.
இறைவா, என்னில் போலியான தாழ்மை இல்லாதிருக்கச் செய்யும்.
ஆவியில் தாழ்மையுள்ளோராய் அனைவருக்கும் அன்புள்ளோராய் மாற்றும்.
தெய்வமே உம்மை நோக்கி நான் காத்திருக்கிறேன். நன்றி.
உம்மை மறவேன் நான். உம் நாமத்தை என் இதயத்தில் சுமந்திடுவேன்;
சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி புஷ்பமே,
கல்வாரியில் உமது இரத்தம் தேவனுக்கு உகந்த வாசனையாம்.
உம்முடைய இரத்தத்தால் கழுவப்பட்ட நானும் நறுமணமே!
இயேசுவே, உம் நறுமணம் என்னில் பரவி நீர்ச்சுனையைப்போலவாக
தேசங்கள், இராஜ்யங்கள், உலகில் அனைத்து யாவையும் நதி பாயட்டும்.
இறைவா உம்முடைய சத்தத்தை கேட்க ஆவலாய் இருக்கிறேன்.
என்னோடு கூட நீர் பேசிடும். என்னோடு நீர் இடைபடும்.
எனக்கு உம்முடைய சித்தத்தை தாரும். முகத்தை காட்டும்.
அக்கினி அபிஷேகத்தினால் நிறைத்து வழி நடத்தும்.
உம்முடைய அக்கினி ஸ்தம்பத்தினால் என்னை நடத்திச் செல்லும்.
உம்முடைய அக்கினிமயமான நாவுகளாக என் நாவில் வந்து தங்கிடும்.
அப்பா பிதாவே, உம்முடைய அக்கினிமயமான சிங்காசனத்திலிருந்து
உம்முடைய அக்கினி உம்முடைய ஆலயத்தில் இறங்கி வருவதாக.
உம்முடைய நெருப்பு, பரிசுத்த நெருப்பு என்மேல் பற்றி எரிவதாக,
செல்லுமிடமெல்லாம் உம்முடைய அக்கினி எங்கும் பற்றி எரிவதாக.
அக்கினி உருவான ஆண்டவரே. அக்கினியே ஸ்தோத்திரம்.

03 NOV 2008

அன்பின் தெய்வமே, ஆறுதலின் தெய்வமே, அன்பே ஆண்டவரே, இரட்சகரே
உம்மை என் கரங்களை நோக்கியே போற்றி துதித்து உயர்த்தி மகிழ்கின்றேன்.
ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவே, நிகழ்கின்ற யாவும் உம் பாலனன்றி நடக்குமோ
இறைவா, அல்பா, ஒமேகா, தொடக்கமும் முடிவுமானவரே உயர்ந்த தெய்வமே
உமக்கு என் இதயத்தின் அடி ஆழத்திலிருந்து நன்றியை கூறுகிறேன்.
இறைவா, உம்முடைய அன்பினை நான் ருசிக்க வேண்டுமே!
இறைவா, யாரை காட்டிலும் நான் உமக்கு பிரியமானவளாய் இருக்க வேண்டும்!
இறைவா, உமக்கு பிடித்த பிள்ளையாய், அன்பானவளாய் இருக்கணுமே!
அப்பா, என் இதயத்தின் வார்த்தைகளை அறிந்திருக்கிற தெய்வமல்லோ நீர்!
இறைவா, இன்னும் ஒரு படி உம்மருகில் நான் நெருங்கி வர வேண்டுமே!
உம்முடைய அபிஷேகம் என்னும் அக்கினியால் என்னை வழிநடத்தணுமே!
என்னுடைய தேவைகளும், விண்ணப்பங்களும் உமக்கு எட்டணுமே!
எல்லாவித தீய செயல்களை விட்டு விலகி உம்மை பற்றிக் கொள்ளணுமே!
இராஜாதி இராஜா, தேவாதி தேவா ஐயவரே, துதிகளுக்கு பாத்திரரே!
சிம்மாசனத்திலும் மகிமையிலும் சொற்தக்கவரே, சொல்லுக்கு பெரியவரே
உமக்கே ஆராதனை. உமக்கே துதிகளை படைத்து மகிழ்கிறேன்
அப்பா, செல்வச் செழிப்பையும் தேடக்கூடாதே! மன்றாடி விண்ணப்பிக்கணுமே!
தேவ ஆவியால் நிரப்புமே! விண்ணப்பத்தின் ஆவியால் ஊக்கம் செய்யுமே!
இராஜாவே, உம்முடைய ஆவியால் நான் நிறைந்து நிரம்பி மகிழணும்.
உம்முடைய இரக்கங்களினால் என்னை காத்துக் கொள்ளணுமே!
தீமை எதையுமே நான் தேடி, நாடாதபடி செய்து காக்கணுமே!
வாழ்வின் ஒவ்வொரு நாளும் என்னை நீர் வழிநடத்தணும்.
என் கையை பிடித்து என்னை அழைத்துச் செல்லும்.
தனியாய், தனிமரமாய் நிற்கும் வேளை நீரே துணையானவர்.
என் துணையாளரே, துதிகளுக்கும் ஸ்தோத்திரங்களுக்கும் பாத்திரரே
எல்லையில்லாத கிருபை என்னை சூழ்ந்து கொண்டிருக்க நீரே காரணரே!
உம்முடைய எல்லையில்லாத அன்பினால் என்னை உம்மிடம் சேர்த்துக்கொண்டீர்
நீரே! நீரே! நீர் ஒருவரே, நிம்மதியின் உறைவிடமே
சமாதான பிரபுவே, சங்கீத புத்தகமே, சர்வ லோக நாயகனே
உம் பாதம் அமர்ந்து நான் உம் வார்த்தைகளை கேட்கணுமே.
உம் அன்பினால் நான் நாட்டப்பட்டு நிலைத்தோங்கணும்.
கனிதருகின்ற மரமாக காலமெல்லாம் நிலைத்திருக்கணும்.
உம்மில் நான் நிலைத்து, உமது சாயலிலே நான் உருவாகணும்.
பக்தியும், பணிவும் என் வாயின் வார்த்தைகளில் விளங்கட்டும்.
மரியாள் போலவாகணும் உம்முடைய சமூகத்தில் ஒவ்வொரு நாளும் நானிருப்பேன்.
உம் பாதம் அமர்ந்து, உம் வேதம் அறிந்து, உம் சொற்படி செய்யணும்.
நீரே எல்லாம் வல்லவர். நீரே சர்வ வல்லவர். ஆமென்.

# Laments Lifted High



கடவுளின் ஒருமை—பிதா, மகன், பரிசுத்த ஆவி—புலம்பல்களை உயர்த்தி, சோதனைகளை வெற்றியாக மாற்றுகின்றனர்